Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.753/2019

**Depositions of PW- 3**

| Name | திரு. மதிவாணன் | Occupation | சார்பு ஆய்வாளர் |
|---|---|---|---|
| Father's name | மாயாண்டி | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 29th day of June 2026.

29.06.2026

எதிரிகள் ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது கிருஷ்ணன்கோவில் காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்னர் கடந்த 2019 ம் வருடம் கிருஷ்ணன்கோவில் காவல்நிலைய தகா.ஜெயபாண்டி தன்னிச்சையாக பணிஓய்வு பெற்றுவிட்டதாலும்சார்பு ஆய்வாளரான பால்வண்ணநாதன் பணிமாறுதலாகி வேறு மாவட்டத்திற்கு சென்றுவிட்டதாலும் நான் வழக்கு கோப்பை பார்வையிட்டு ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 03.01.2019 ம் தேதி தகா.ஜெயபாண்டி என்பவர் நிலைய பொறுப்பிலிருந்தபோது அரசு மருத்துவமனையிலிருந்து கிடைத்த தகவலை பெற்று அங்கு சிகிச்சையிலிருந்த முனியாண்டி என்பவர் கொடுத்த புகார்மனுவை பெற்று நிலையம் வந்து புகாரின் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.2/2019 பிரிவுகள். 294(b), 355, 341, 324, 506(2) IPC ஆக வழக்கு பதிவு செய்துள்ளார். **புகார்மனு அசாஆ.2 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அசாஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் முதல் தகவல் அறிக்கையின் அசலையும் வாதியின் புகார்மனுவையும் இணைத்து சம்மந்தப்பட் நீதிமன்றத்திற்கும் மற்ற நகல்களை உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்துள்ளார். பின்னர் வழக்கு கோப்பை சார்பு ஆய்வாளர் வசம் ஒப்படைத்துள்ளார். பின்னர் அன்றைய தினமே வழக்கு கோப்பை சார்பு ஆய்வாளர்

தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 19.30 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் தங்கமாரிமுத்து, ஹரிராகவன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **பார்வை மகஜர் அசாஆ.4 ஆகவும் மாதிரி வரைபடம் அசாஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் சாட்சிகள் முனியாண்டி, மாடசாமி, மாரியப்பன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் எதிரிகளை தேடிவந்த நிலையில் எதிரிகள் மாண்புமிகு திருவில்லிபுத்தூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன்ஜாமீன் பெற்றதால் தனியாக கைது செய்யவில்லை.

பின்னர் இவ்வழக்கில் காயம்பட்டவருக்கு சிகிச்சை அளித்த திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனை மருத்துவர் சுகன்யா தேவி என்பவரை விசாரித்து விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அசாஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தகா.ஜெயபாண்டி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் 09.02.2019 அன்று இவ்வழக்கின் விசாணை முடித்து எதிரிகள் மீது பிரிவுகள். 294(b), 355, 341, 324, 506(2) IPC ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

மேற்படி சொன்ன தேதியில் சொன்ன விதத்தில் புகார்மனு பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. பார்வை மகஜர், வரைபடம் போன்ற ஆவணங்கள் இவ்வழக்கிற்காக காவல்நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயாரிக்கப்பட்டவை என்றால் சரியல்ல. இவ்வழக்கின் சாட்சிகளை சரிவர புலன் விசாரணை மேற்கொள்ளாமல் குற்ற இறுதியறிக்கையானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இவ்வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து பின்னிட்டு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.